# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்
வரலாறும் பண்பாடும் அறிவோம்
2020

# தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 9

## 2007இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மனற்கேணி போன்று கற்கக் கற்க குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் திராவிட நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்குகின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன. இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன.

# தொல்காப்பிய மன்றம் - கனடா

அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டுவருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றி தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழி-களைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.

கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறும் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

---

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம் (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன் (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன் (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன் (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

# தொல்காப்பிய மன்றப் பாடல்

## வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை – தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே – எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை – நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து – தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் – தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது – வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக – ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

**கையேடு - 9**

## தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.

சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.

சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

## 2020 பிரிவு 9 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2007இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம். இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்.

1.பேச்சுப்போட்டி 2. பொது அறிவுப்போட்டி 3. வினாக்களுக்கு விடைதெரிதல்

**1. பேச்சுப் போட்டி - "செம்மொழியாம் தமிழ்மொழிக்கு வித்திட்டவர் தொல்கப்பியர்"**

பேச்சுப் போட்டிக்குரிய பேச்சு கையேட்டில் உள்ளது.

சிறுவர் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை மனனம் செய்து நடுவர்கள் முன்னிலையில் பேசவேண்டும்.

**2. படங்களுக்கான சொற்களைக் கூறுதல்:**

- இப்பிரிவினருக்கு 208 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- சொற்களைத் தெரிவுசெய்யும்போது குலுக்கல் முறையில் சொற்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

**3. கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து வட்டமிடுதல்.**

* பல்தேர்வு வினாவிடைகள் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படும். போட்டியாளர் கொடுக்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு-செய்யவேண்டும். மேலதிக வினாக்களும் கொடுக்கப்படும். போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்களின் புள்ளிகள் கணக்கில் எடுக்கப்படும்.

## 2020 கனடா தொல்காப்பிய மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டி

**பிரிவு: 9** **அகவைப் பிரிவு: 13**

# செம்மொழியான தமிழ் மொழிக்கு வித்திட்டவர் தொல்காப்பியர்.

வணக்கம்.

**"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"** என்றார் புரட்சிக்கவி பாரதிதாசன். **"தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்"** என்றார் மகாகவி பாரதியார். ஆம்! அமிழ்தினும் இனிதானது தமிழ். அமிழ்து, அமிழ்து என்று தொடர்ந்து உரைத்தால் எமக்கு கேட்பது தமிழ் என்பதுதான். அவ்வித அமிழ்தம் போன்றது எமது தமிழ்மொழி. எமது மொழி பக்திப் பரவசம் மிக்க இறைவனைத் துதிபாடும் பெருமை மிக்க மொழி. இன்றும் நாம் பெருமைப்படுவதற்கான உயர் தமிழ்ச் செம்மொழித் தகமையைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்த பெருமைக்கு உரியவர், தொல்காப்பியரே.

அன்னிய ஆக்கிரமிப்பினாலும் கடற்கோள்களாலும் எமது தமிழ் மொழியின் அரும்பெரும் பொக்கிசங்கள் காவுகொள்ளப்பட்டன. ஆம்! முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என அமைத்துத் தமிழை வளர்த்தவன் தமிழன். தமிழ் உணர்வையும், பற்றையும் சற்றும் விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்ததால் எமது பண்பாட்டுக் கருவூலங்கள் இன்றுவரை பாதுகாக்கப் பட்டன. எழுத்து, சொல் இலக்கணத்திற்கு மேலாக வாழ்வியலுக்கான இலக்கணத்தையும் வகுத்துத் தந்தவர் தொல்காப்பியர் அவர்களே.

தமிழுக்குச் செம்மொழித் தகமை உண்டு என்பதனை எடுத்துரைத்து அதனை உலக அரங்கிலே நிறுவியவர் ஒரு தமிழரல்லர். அவர் தமிழைக் கற்று அதன் வழி தமிழில் நாட்டம் கொண்டு வாழ்ந்த தமிழ்ப் பேராசிரிய ரான மேன்மைக்குரிய 'றொபேட் காட்' என்னும் அமெரிக்கரே. அவர் எம் மொழியின் சிறப்பை அதன் உயர்வை நாம் அறியாத அளவிற்கு அறிந்து வெளிப்படுத்தியுள்ளார்.

நம்மிற் பலர் இன்று தமிழைப் பேசக், கற்க மறுத்து வருகின்றனர். தமிழ் சோறுபோடுமா? என்று கேட்கின்றனர். இது எந்த வழியில் நியாயமானது? தமிழ் எமது அடையாளம், ஆணிவேர். அந்த அடையாளத்தைப் பேணி ஆணிவேரைத் தேடவேண்டிய இடம் எமக்குக் கிடைத்துள்ள தொல்காப்பியமே. தமிழின் பெருமை பேசும் தொல்காப்பியத்தை நாம் கற்கவேண்டும். இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த தொல்காப்பியத்தின் பெருமை, அதன் தொன்மை எமது மொழிக்குச் செம்மொழி என்னும் உயரிய பெறுமானத்தைத் தந்துள்ளது. உலகத்தைத் தமிழை நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

தாய்மொழிக் கல்வி சாலச்சிறந்தது என்பார்கள். தாய்மொழி தெரியாத வனுக்குப் பண்பாட்டைப்பற்றி, எமது இனத்தின் வழக்காறுபற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பே இல்லை என்பேன். ஒரு மொழியின் பண்பாட்டை, செழுமையை, அதன் சிறப்பை, விழுமியத்தை எடுத்தியம்பும் தன்மை அதன் மொழிக்கு மட்டுமே உண்டு. அவ்வாறெனின் நாம் எமது மொழியை மறக்கலாமா அல்லது கற்காமல் விட்டுவிடலாமா? இல்லை! நாம் தமிழர்கள் தமிழைக்கற்று தமிழின் பண்பாட்டினை அறிந்து அதன்வழி வாழத் தலைப்படுதல் வேண்டும்.

தமிழை நாம் மறுக்காது, வெறுக்காது விருப்போடு கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் 'நாம் தமிழர்' என்று தலைநிமிர்ந்து நிற்க முடியும். இன்று நாம் தமிழைக் கற்றுக்கொள்ள நிறையவே வாய்ப்புக்கள் உள்ளன. அதனைப் பயன்படுத்தித் தமிழைக் கற்போம். தமிழராக வாழ்வோம் என வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

# பலகார வகை


வடை


முறுக்கு


அரியதரம்


பகோடா


மோதகம்


கொழுக்கட்டை



வாய்ப்பன்


பணியாரம்

# உடல் உறுப்புகள்



கண்ணிமை



அண்ணம்



நாக்கு



தோள்மூட்டு



கழுத்து



மணிக்கட்டு



முழங்கால்



பாதம்

# உடல் உறுப்புகள்




நெற்றி



முள்ளந்தண்டு



நகம்



நெஞ்சு



தாடி



மீசை



வயிறு




கொண்டை

# பெரியார்கள்




தொல்காப்பியர்



வள்ளுவர்



வீரமாமுனிவர்



அறிஞர் அண்ணா



மு.வரதராசன்



தனிநாயகம் அடிகளார்




நாவலர்



பாரதியார்

# பெரியார்கள்

| | |
|---|---|
|  இளங்கோவடிகள் |  சோமசுந்தரப்புலவர் |
|  ஔவையார் |  கபிலர் |
|  கம்பர் |  நக்கீரர் |
|  பாரதிதாசன் |  சுவாமி விபுலாநந்தர் |

# பறவைகள்



பூநாரை



சிட்டுக்குருவி



தீக்கோழி



கொண்டைலாந்தி



மரங்கொத்தி



செண்பகம்



கழுகு



ஆந்தை

# காய் வகைகள்



நாரத்தங்காய்



வாழைக்காய்



பலாக்காய்



பூசணிக்காய்



அன்னமுன்னாக்காய்



நெல்லிக்காய்



புடலங்காய்



சுரைக்காய்

# மரக்கறி வகைகள்



பீர்க்கங்காய்



கூனைப்பூ



பச்சைக்கோசு



பூக்கோசு



வெண்டிக்காய்



முள்ளங்கி



தண்ணீர்விட்டான்



சீமைப்பூசணி

# வீட்டுப் பொருட்கள்



மின்விசிறி



தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



தாச்சி




மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி



தொலைபேசி



மணிக்கூடு

# பாவனைப் பொருட்கள்



அம்மி



ஆட்டுக்கல்



பிட்டு உலை



சுளகு



இடியப்ப உரல்



திரிகை




சூட்டுஅடுப்பு



திருகணை

# பூச்சி வகை

| | |
|---|---|
| <br>எறும்பு | <br>வண்ணத்துப்பூச்சி |
| <br>தேள் | <br>வெட்டுக்கிளி |
| <br>கரப்பான்பூச்சி | <br>மட்டத்தேள் |
| <br>ஈசல் | <br>தும்பி |

# பூச்சி வகை



தேனீ



நுளம்பு



கரப்பான் பூச்சி



கறையான்



சிலந்தி



குளவி



மூட்டைப்பூச்சி



புலிமயிர்ச்சிலந்தி

# மரங்கள்



பனை



தென்னை



பலாமரம்



கமுகு



மூங்கில்



வேம்பு




ஆலமரம்



வாழைமரம்

# கடல் வாழ்வன

| | |
|---|---|
| <br>கடல்நாய் | <br>கடல்யானை |
| <br>கடற்சிங்கம் | <br>இறால் |
| <br>கடலட்டை | <br>சங்கு |
| <br>சிப்பி | <br>திமிங்கிலம் |

# கடல் வாழ்வன


நட்சத்திரமீன்


ஓங்கில்


நண்டு


விலாங்குமீன்


திருக்கைமீன்


நெத்தலிமீன்


கடல்ஆமை


சொறிமீன்

# வீட்டு விலங்குகள்



நாய்




பூனை



முயல்



மாடு




ஆடு



எருது



குதிரை



பன்றி

# காட்டு விலங்குகள்



கருஞ்சிறுத்தை



நரி



யானை




குரங்கு



கழுதைப்புலி



சிங்கம்



ஒட்டகச்சிவிங்கி



சிறுத்தை

# பூக்கள்



முல்லைப்பூ



சாமந்திப்பூ



காந்தள்பூ



அரளிப்பூ



குறிஞ்சிப்பூ



சூரியகாந்திப்பூ



எருக்கலம்பூ



நந்தியாவட்டைப்பூ

# கொடிகள்



கனடா




இலங்கை




அமெரிக்கா




இந்தியா



பிரித்தானியா



பிரான்ஸ்



சுவிஸ்



ஜேர்மனி

# மங்கலப் பொருட்கள்



நிறைகுடம்



வெற்றிலை



மாவிலை



பாக்கு



பன்னீர்ச்செம்பு



சந்தனம்



வாழையிலை



குங்குமம்

# ஆடை வகைகள்

| | |
|---|---|
| <br>**காற்சட்டை** | <br>**சாரம்** |
| <br>**உள்ளாடை** | <br>**துண்டுத்தாவணி** |
| <br>**சேலை** | <br>**சால்வை** |
| <br>**வேட்டி** | <br>**தலைப்பாகை** |

# பழங்கள்



பலாப்பழம்



வில்வம்பழம்



விளாம்பழம்



பப்பாசிப்பழம்



வாழைப்பழம்



மாதுளம்பழம்



வத்தகைப்பழம்



திராட்சைப்பழம்

# கிழங்கு வகை



உருளைக்கிழங்கு




மரவள்ளிக்கிழங்கு



சேப்பங்கிழங்கு



பீற்றூட் - செங்கிழங்கு



வத்தாளைக்கிழங்கு



கருணைக்கிழங்கு



சேனைக்கிழங்கு



முள்ளங்கி

# வாகனங்கள்



சிற்றுந்து



பேருந்து



மிதியுந்து



தொடருந்து



விண்ணுந்து



நீர்மூழ்கிக் கப்பல்



பாரவூர்தி



பாய்க்கப்பல்

# இலை வகை



கறிவேப்பிலை



புதினாக்கீரை



கொத்தமல்லி இலை



முருங்கையிலை



வல்லாரை



பொன்னாங்காணி



பசளிக்கீரை



அகத்திக்கீரை

# எண்கள்

| | |
|---|---|
| 90<br>தொண்ணூறு | 200<br>இருநூறு |
| 300<br>முன்னூறு | 400<br>நானூறு |
| 500<br>ஐந்நூறு | 900<br>தொளாயிரம் |
| 1000<br>ஆயிரம் | 99<br>தொண்ணூற்றொன்பது |

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## பிரிவு 9 வினா - விடைகள்

1. தமிழ் மொழியின் முதல் எழுத்துக்கள் எத்தனை?
**முப்பது (12 உயிரும், 18 மெய்யும்)**

2. தமிழ் நெடுங்கணக்கில் எத்தனை எழுத்துகள் மொழிக்கு முதலில் வரும்? **நூற்றுமூன்று**

3. தமிழ் எழுத்துகள் எத்தனை வகைப்படும் அவற்றைத் தருக?
**நான்கு - உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து**

4. வல்லின மெய்யெழுத்துக்கள் எவை? **க், ச், ட், த், ப், ற்**

5. தமிழில் மெய்யெழுத்துக்களில் வரும் இன எழுத்துக்களைக் கூறுக? **க் - ங் / ச் - ஞ் / ட் - ண் / த் - ந் / ப் - ம் / ற் - ன்**

6. சொற்கள் எத்தனை வகைப்படும்? **நான்கு**
**(பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்)**

7. வினையால் அணையும் பெயருக்கு உதாரணம் தருக?
**அகழ்வார், இகழ்வார், இறந்தார், உடையான், மாண்டார், அஞ்சுவது**

8. சுட்டெழுத்துக்கள் எவை? **அ, இ, உ**

9. வினாவெழுத்து எத்தனை? **ஐந்து - யா, எ, ஏ, ஆ, ஓ**

10. ஐவகை இலக்கணம் எவை?
**எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி**

11. முதலெழுத்துக்களைச் சார்ந்துவரும் எழுத்துகளை எவ்விதம் அழைப்பர்? **சார்பெழுத்து**

12. முற்றுப்பெறாத வினைச் சொல்லுக்கு உதாரணம் தருக?
**வந்த, உடைந்த, செய்து, நின்ற, உண்ட, காய்ந்த**

13. பெயரைக் கொண்டு முடியும் எச்சம் எது? **பெயரெச்சம்**

14. வினையைக் கொண்டு முடியும் எச்சம் எது? **வினையெச்சம்**

15. எழுவாய் வேற்றுமைக்கு என இல்லாதது என்ன?
**தனி உருபு**

16. எட்டாம் வேற்றுமையை எவ்விதம் அழைப்பர்?
**விளி வேற்றுமை - கண்ணனே! தம்பீ! மன்னவா!**

17. காலங்களைக் காட்டும் சொற்கள் எவை? **வினைமுற்றுகள்**

18. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது? **தனிமொழி**

19. இடுகுறிப் பெயர் என்றால் என்ன? **எந்தக் காரணமும் இன்றி இடப்பட்ட பெயர் - மண், மரம், கல், புல், நாய், கோழி**

20. காரணப் பெயர் என்றால் என்ன? **காரணம் கருதி வைக்கப்பட்ட பெயர்- பறவை, நாற்காலி, முக்காலி, வளையல், பொரியல்**

21. உயர்திணைக்கு உரிய பால்கள் எவை?
**ஆண்பால், பெண்பால், பலர்பால்**

22. அ.்.றிணைக்கு உரிய பால்கள் எவை?
**ஒன்றன்பால், பலவின் பால்**

23. வினைச்சொல் காட்டும் காலங்கள் எத்தனை வகைப்படும்?
**மூன்று - (இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்)**

24. மாத்திரை என்பதற்கான பொருள்?
**ஓர் எழுத்தின் ஓசை ஒலிக்கும் கால அளவு**

25. தமிழ் இலக்கணம் கூறும் வேற்றுமை என்பதன் பொருள் என்ன? **பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது.**

26. மூவிடப் பெயர்கள் எவை? **தன்மை, முன்னிலை, படர்க்கை**

27. ‘கடி மலர்’ என்பதில் ‘கடி’ என்னும் உரிச் சொல் குறிக்கும் பொருள் எது? **வாசனை**

28. ‘கடி வாள்’ என்பதில் ‘கடி’ என்னும் உரிச் சொல் குறிக்கும் பொருள் எது? **கூர்மை**

29. ‘கடி முரசு’ என்பதில் ‘கடி’ என்னும் உரிச் சொல் குறிக்கும் பொருள் எது? **ஒலிக்கும் முரசு**

30. எண் என்ற பதம் இலக்கணத்தில் எதனைக் குறிக்கின்றது?
**ஒருமை, பன்மை**

31. நனி சுவை என்பதில் உள்ள 'நனி' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது? **மிகு**

32. குறிப்பு வினைமுற்று என்பதற்கு ஒரு உதாரணம் தருக? **கண்ணன், நீலவண்ணன்**

33. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக?

**1. வெண்டாமரை = வெண்மை + தாமரை**
**2. செவ்வானம் = செம்மை + வானம்**
**3. பேச்சுக்கலை = பேசு + கலை**
**4. தமிழன்னை = தமிழ் + அன்னை**
**5. கருங்கூந்தல் = கருமை + கூந்தல்**
**6. கரும்பலகை = கருமை + பலகை**
**7. செந்தமிழ் = செம்மை + தமிழ்**
**8. பிணியின்றி = பிணி + இன்றி**
**9. நட்பன்று = நட்பு + அன்று**
**10. வானொலி = வான் + ஒலி**

34. பின்வரும் முன்னிலைப் பெயர்ச் சொற்களை வேற்றுமை உருபுகளோடு சேர்த்து எழுதுக:

**1. நீங்கள் + அது = உங்களது**
**2. நீ + ஐ = உன்னை, நின்னை**
**3. நாங்கள் + ஐ = எங்களை**
**4. உ + இடம் = உவ்விடம்**
**5. எ + புலவர் = எப்புலவர்**
**6. தான் + ஐ = தன்னை**
**7. தாம் + ஐ = தம்மை**
**8. நாம் + ஐ = எம்மை**
**9. அ + இடம் = அவ்விடம்**
**10. அ + வானம் = அவ்வானம்**

35. பொருத்தமான சொற்களை வைத்து வாக்கியத்தை நிறைவு செய்க? (வீழ்ச்சி, வெற்றி, உறவு, பெருமை, புகழ், அழிவு, உயர்வு, சிறப்பு, இன்பம், துன்பம்)

1. அறம் ......... தரும். **இன்பம்**
2. அன்பு ......... தரும். **உறவு**
3. ஆக்கம் ......... தரும். **பெருமை**
4. ஆசை ......... தரும். **அழிவு**
5. உண்மை ......... தரும். **சிறப்பு**
6. உழைப்பு ......... தரும். **உயர்வு**
7. பகை ......... தரும். **துன்பம்**
8. பண்பு . ........ தரும். **புகழ்**
9. முயற்சி ......... தரும். **வெற்றி**
10. முயலாமை ......... தரும். **வீழ்ச்சி**

36. பின்வரும் சொற்களுக்கு ஒத்த பொருள் தரும் சொற்களைத் தருக?

1. புரை - **குற்றம்**
2. பயக்கும் - **தரும்**
3. சுடும் - **வருத்தும்**
4. அன்ன - **போல**
5. அசரீரி - **உருவிலிவாக்கு**
6. அகம் - **உள்ளம், உள்ளே**
7. புலவர் - **கவிஞர்**
8. அகதி - **ஏதிலி**
9. பந்தயம் - **போட்டி**
10. ஆழி - **கடல், சமுத்திரம்**

37. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களைத் தருக?

1. மலை - **மடு**
2. அடி - **முடி**
3. அகம் - **புறம்**
4. நட்பு - **பகை**
5. விருப்பு - **வெறுப்பு**
6. துன்பம் - **இன்பம்**
7. இவை - **அவை**
8. மேல் - **கீழ்**
9. வேறுபாடு - **ஒருமைப்பாடு**
10. வாடுதல் - **தழைத்தல்**

## இலக்கியம்:

38. உலகத் தமிழாராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது? **தரமணி (சென்னை)**

39. முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு எப்போது, எங்கு நடத்தப்பட்டது? **1967, கோலாலம்பூர் (மலேசியா)**

41. முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டை ஏற்பாடு செய்த ஈழத்தவர் யார்? **தனிநாயகம் அடிகளார்**

42. எத்தனையாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது? **நான்காவது**

43. சென்னையில் 1968 ஆம் ஆண்டு நடந்த இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், அதன் இரண்டாம் நாளன்று 10 தமிழ்ச்சான்றோர்களிற்கு சிலைகள் திறந்து வைக்கப்பட்டன, அச்சான்றோர்களில் ஒருவரின் பெயர் தருக?

**1. திருவள்ளுவர் 2. ஔவையார் 3. கம்பர்**
**4. ஜி.யு.போப் 5. கால்டுவெல் 6. கண்ணகி**
**7. வீரமாமுனிவர் 8. பாரதியார் 9. பாரதிதாசன்**
**10. வ.உ.சிதம்பரனார்**

44. இலங்கையில் முதன் முதலில் வெளிவந்த தமிழ்ச் சஞ்சிகை எது? **உதயதாரகை**

45. உதயதாரகை என்னும் சஞ்சிகை எப்பொழுது வெளி வந்தது? **1842ம் ஆண்டில்**

46. தமிழ் மொழியில் முதன்முதலில் வந்த கலைக்களஞ்சியம் (encyclopedia) எது? **அபிதானசிந்தாமணி**

47. அபிதான சிந்தாமணி யாரால் எழுதப்பட்டது? **சிங்காரவேலு முதலியார்.**

48. அபிதான சிந்தாமணி எப்போது எழுதப்பட்டது.? **1910 ஆம் ஆண்டு.**

49. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை எழுதிய ஐரோப்பியர் யார்? **கால்டுவெல் பாதிரியார்**

50. திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? **ஜீ.யு.போப்**

51. இத்தாலியரான "கொன்ஸ்ரன்ரைன் ஜோசெவ் பெஸ்கி" (Constantine Joseph Beschi) தனக்கு வைத்துக்கொண்ட தமிழ்ப் பெயர் என்ன? **வீரமாமுனிவர்**

52. தாய்லாந்து நாட்டில் திருமணத்தின்போது ஓதப்படுவது எது? **திருவாசகம்**

53. கப்பலோட்டிய தமிழர் எனப் புகழப்படுபவர் யார்? **வா. உ.சிதம்பரனார்**

54. திருக்குறளை இயற்றியவர் யார்? **திருவள்ளுவர்**

55. திருவள்ளுவரின் வேறு பெயர்கள் எவை? **செந்நாபோதார், தெய்வப் புலவர், பொய்யாமொழிப் புலவர்**

56. முப்பால் என அழைக்கபடும் நூல் எது? **திருக்குறள் (அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளை உடையது)**

57. திருக்குறளில் அதிகாரம் என்னும் சிறுபிரிவின் கீழ் எத்தனை குறட்பாக்கள் உள்ளன? **பத்து**

58. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறட்பாக்கள் உள்ளன? **1330**

59. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்து எழுதியவர் யார்? **வீரமாமுனிவர்**

60. சங்ககால இலக்கிய நூல்களை தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் என்பவர்கள் எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனத் தொகுத்து அச்சிட்டார்கள். இத்தொகுப்பில் திருக்குறள் எத்தொகுப்பினைச் சார்ந்தது? **எட்டுத்தொகை**

61. திருக்குறளுக்கு உரை தந்தவர்களுள் ஒருவர் யார்? **பரிமேலழகர், மணக்குடவர், சேனாவரையர்**

62 முத்தமிழ் எனப்படுபவை எவை? **இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்**

63. பழந்தமிழ் இலக்கியங்களில் ஐம்பெரும்காப்பியங்களாக அறியப்படுபவை எவை? **சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி**

64. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்? **இளங்கோ அடிகள்**

65. சிலப்பதிகாரத்தில், கோவலன், கண்ணகி இருவரோடும் மதுரைக்குச் சென்ற துறவி யார்? **கவுந்தியடிகள்**

66. கண்ணகியின் காற்சிலம்பினுள் இருந்த பரல்கள் எவ்வகையானவை? **மாணிக்கப் பரல்கள்**

67. மணிமேகலையை எழுதியவர் யார்? **மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

68. மணிமேகலை என்னும் காப்பிய நாயகியின் தந்தை தாயர் யாவர்? **கோவலன் - மாதவி**

69. சீவகசிந்தாமணியை இயற்றியவர் யார்? **திருத்தக்கதேவர்**

70. குண்டலகேசியை இயற்றியவர் யார்? **நாதகுத்தனார்**

71. கம்பரால் எழுதப்பட்ட நூல் எது? **கம்பராமாயணம்**

72. ஔவையார் எழுதிய நூல்கள் எவை? **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நன்னூல்**

73. சரசோதிமாலை எனும் சோதிட நூல் எப்போது அரங்கேற்றப்பட்டது? **கி.பி. 1310**

74. சரசோதிமாலை நூலை எழுதியவர் யார்? **போசராஜப்பண்டிதர்**

75. யாழ் நூலை எழுதியவர் யார்? **சுவாமி விபுலாநந்தர்**

76. சுவாமி விபுலாநந்தர் பிறந்த இடம் எது? **காரைதீவு**

77. சுவாமி விபுலாநந்தர் ஆரம்பித்த பாடசாலை எது? **சிவானந்த வித்தியாலயம்**

78. தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளுவதற்காக ஆறுமுக நாவலர் எழுதிய நூல்கள் எவை? **பாலபோதினி, பாலபாடம்.**

79. ஈழத்திலும் தமிழகத்திலும் பாடசாலைகளை நிறுவித் தமிழ் வளர்த்தவர் யார்? **ஆறுமுக நாவலர்**

80. 'குயில் பாட்டு', 'புதிய ஆத்திழசூடி' என்பன யாரால் இயற்றப்பட்டன? **சுப்பிரமணிய பாரதியார்**

81. சங்ககாலத்தில், தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்டு தமிழ ஆய்வும் செய்யுள் இயற்றுதலும் நடைபெற அமைக்கப்பட்ட முச்சங்கங்கள் எவை? **முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம்**

82. முச்சங்கங்கள் அமைந்த தலைநகரங்களை ஒழுங்கு முறையில் கூறுக? **தென்மதுரை, கபாடபுரம், தற்போதைய மதுரை**

83. தொண்டி எந்த நாட்டின் துறைமுகமாக விளங்கியது? **சேரநாடு**

84. மதுரை எந்த நாட்டின் தலைநகராக விளங்கியது? **பாண்டி நாடு**

85. பூம்புகார் எந்த நாட்டின் தலைநகராக இருந்தது? **சோழ நாடு**

86. இந்தியாவில் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன் யார்? **வீரபாண்டிய கட்டப்பொம்மன்**

87. தமிழர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு அவர் பெயரிலேயே இயங்கிவரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் எது? **அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

88. சாளரம் அல்லது பலகணி என்பது இன்று எவ்விதம் அழைக்கப்படுகின்றது? **சன்னல் (யன்னல்)**

89. எமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களில் தொன்மையானது எது? **தொல்காப்பியம்**

90. தொல்காப்பிய அதிகார வைப்புக்கள் எவை? **எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்**

91. தொல்காப்பியர் மனித வாழ்வியலை எவ்வாறு பிரிக்கிறார் ? **அகத்திணை, புறத்திணை**

92. அகத்திணை, புறத்திணை என்பதில், திணை என்றால் என்ன? **இங்கு திணை என்பது ஒழுக்கம் வாழ்க்கைநெறி என்று பொருள்படும். ஒழுகுதல் என்பது நன்னெறிகளோடு வாழ்தல்.**

93. அகத்திணை என்றால் என்ன?
**ஒரு ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையேயான அகவாழ்வில் நிகழும் உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள் சார்ந்த வாழ்க்கைநெறி**

94. புறத்திணை என்றால் என்ன? **ஒரு மனிதனின் புறவாழ்க்கை (வெளியுலக வாழ்க்கை : வீரம், போர், அரசியல், கொடை, நிலையாமை) சார்ந்த உணர்வுகள், சிந்தனைகள், செயற்பாடுகள் சார்ந்த வாழ்க்கைநெறி.**

95. அகத்திணையில் வரும் ஐவகை நிலங்களில் ஒன்றைத் தருக? **குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்**

96. மலையும் மலை சார்ந்த இடத்தையும் எப்படி அழைப்பர்? **குறிஞ்சி**

97. காடும் காடுசார்ந்த இடத்தையும் எப்படி அழைப்பர்? **முல்லை**

98. முல்லையும் குறிஞ்சியும் கோடையால்(வறட்சியால்) மாறிய இடத்தை எப்படி அழைப்பர்? **பாலை.**

99. வயலும் வயல் சார்ந்த இடத்தை எப்படி அழைப்பர்? **மருதம்**

100. கடலும் கடல் சார்ந்த இடத்தையும் எப்படி அழைப்பர்? **நெய்தல்**

101. அகவாழ்வில் கூறப்படும் கைக்கிளை என்பதன் ஒத்தபொருள் தரும் சொல்? **ஒருதலைக் காமம்**

102. அகவாழ்வில் கூறப்படும் பெருந்திணை என்பதற்கு பொருள் என்ன? **பொருந்தாக் காமம்**

103. புறநானூறு எந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியம்? **சங்ககாலம்**

104. புறத்திணை இலக்கியத்தில் வாகை என்னும் பதம் குறிப்பது என்ன? **வெற்றி**

105. புறத்திணையில் கூறப்படும் போர்முறைகளில், வெட்சித்திணையின் பண்பு என்ன? **ஆநிரை கவர்தல்**

106. புறத்திணையில் கூறப்படும் போர்முறைகளில், கரந்தைத் திணையின் பண்பு எது? **ஆநிரை மீட்டல்**

107. கடற்கோளால் அழிந்த தமிழகத்தின் பண்டைய நகரங்களில் ஒன்றின் பெயரைக் கூறுக? **பூம்புகார்**

108. சங்க இலக்கியங்களில் கூறப்படும் "திரிகடுகம்" என்பது எந்த மூலிகைகளைக் குறிக்கிறது? **சுக்கு, மிளகு, திப்பிலி**

109. கொடை வகைகள் எவை? **வரையின்றி யாவர்க்கும் கொடுத்தல், புகழ்வோர்க்குக் கொடுத்தல், இரப்போர்க்குக் கொடுத்தல்.**

110. பசுக்கன்றைக் கொன்றமைக்காகத் தனது மகனையே தேர்ச்சில்லில் வைத்து மரண தண்டனை விதித்த மன்னன் யார்? **மனுநீதிகண்ட சோழன்**

111. ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த வள்ளல் யார்? **அதியமான்**

112. முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் யார்? **பாரி**

113. மயிலுக்குப் போர்வை தந்த மன்னன் யார்? **பேகன்**

114. ஐம்பெருங்குரவர்கள் யாவர்? **அரசன், குரு, தந்தை, யாசிகன், மூத்தோன்**

115. ஐம்பொறிகள் எவை?
**1. மெய் 2. வாய் 3. கண் 4. மூக்கு 5. செவி**

116. ஐம்பெரும் பூதங்கள் எனப்படுபவை எவை?
**1. நிலம் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வானம்.**

117. ஐம்புதங்களில், காற்றின் குணங்கள் எவை?
**ஒலி, தொடு உணர்வு (பரிசம்)**

118. சுவைகள் ஆறும் எவை? **1. கைப்பு 2. தித்திப்பு 3. புளிப்பு 4. உவர்ப்பு 5. துவர்ப்பு 6. கார்ப்பு**

119. பருவ மங்கையர் எழுவரும் யாவர்? **பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்**

120. கிழமை நாட்கள் எவை? **ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி**

121. மாதங்களின் பெயர்களைத் தருக? **தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி**

122. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்படும் பெரும் பொழுது எனப்படும் ஒரு ஆண்டின் பருவகாலங்கள் ஆறும் எவை? **இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம்**

123. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்படும் சிறுபொழுது எனப்படும் ஒரு நாளின் பொழுதுகள் எவை?
**1. மாலை 2. யாமம் 3. வைகறை**
**4. விடியல் 5. நண்பகல் 6. எற்பாடு**

124. தொல்காப்பியர் குறிப்பிடும் இளமைப் பெயர்கள் எத்தனை? **ஒன்பது (பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, குழவி)**

125. தென்னை மரத்தின் இளமைப் பெயர் என்ன? **பிள்ளை**

126. நெல்லுக்கு வழங்கும் இளமைப் பெயர் என்ன? **பயிர்(நாற்று)**

127. தொல்காப்பியர் தரும் "வெருகு" என்பது எந்த விலங்கைக் குறிப்பிடுகின்றது? **காட்டுப்பூனை**

128. "மூங்கா" என்பது எந்த விலங்குக்கு உரிய பெயர்? **கீரிப்பிள்ளை**

129. தொல்காப்பியத்தில் முதலையைக் குறிக்கும் வேறு பெயர் ஒன்றைத் தருக? **கராம்**

130. மான் இனங்களில் இரண்டின் பெயரைத் தருக? **புல்வாய், மரை**

131. இளமைப் பெயராக பிள்ளை என்பதனைப் பெறாத விலங்கு ஒன்று தருக? **நாய்**

132. நாய், பன்றி, புலி, முயல் ஆகிய நான்கினதும் இளமைப் பெயர் என தொல்காப்பியர் குறிப்படுவது எதனை? **பறழ்**

133. நாயின் பெண்பாற் பெயர் எது? **பிணவு**

134. "பார்ப்பும் பிள்ளையும்" எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் இளமைப் பெயர்பெறுவன எவை? **பறவைகளின் இளமைப் பெயர்**

135. பெண்மை குறித்த மரபுப்பெயர்கள் எத்தனை எனத் தொல்காப்பியம் கூறுகின்றது? **பதின்மூன்று 13 - பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பினவு, பிடி என்பனவாகும்.**

136. தொல்காப்பியத்தில், ஓரறிவு உயிர்களின் தன்மை எனக் கூறப்படுவது என்ன? **தொட்டுணரக்கூடியவை (தொடுதல் என்ற திறன் உடையவை)**

137. ஓரறிவுள்ளன எவை? **புல்லும் தாவரங்களும்**

138. தொல்காப்பியத்தில், ஈரறிவு உயிர்களின் தன்மைகள் எனக் கூறப்படுபவை எவை?
**தொடுதல், சுவைத்தல் என்ற திறன்கள் உடையவை**

139. ஈரறிவுள்ளன எவை? **நந்தும் (சங்கு, நத்தை, அலகு, நொள்ளை), முரலும் (சிப்பி, கிளிஞ்சல், ஏரல்)**

140. தொல்காப்பியத்தில், மூவறிவு உயிர்களின் தன்மைகள் எனக் கூறப்படுபவை எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல் என்ற திறன்கள் உடையவை**

141. மூவறிவுள்ளன எவை? **சிதலும் (கறையான்), எறும்பும்**

142. தொல்காப்பியத்தில், நான்கறிவு உயிர்களின் தன்மைகள் எனக் கூறப்படுபவை எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல் என்ற திறன்கள் உடையவை**

143. நான்கறிவுள்ளன எவை? **நண்டு, தும்பி, தேன், வண்டு**

144. தொல்காப்பியத்தில், ஐந்தறிவுள்ள உயிர்களின் தன்மைகள் எனக் கூறப்படுபவை எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல் என்ற திறன்கள் உடையவை**

145. ஐயறிவுள்ளன எவை? **நாற்கால் விலங்குகள், பறவைகள், மீன், ஆமை, பாம்பு, முதலை**

146. தொல்காப்பியத்தில், ஆறறிவுள்ள உயிர்களின் தன்மைகள் எனக் கூறப்படுபவை எவை? **தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல், சிந்தித்தல் என்ற திறன்கள் உடையவை**

147. ஆறறிவுடைய உயிரினங்கள் எவை? **மனிதர்கள்**

148. யானை, காட்டுப்பன்றி என்பனவற்றின் ஆண்பாற் பெயர் எது? **களிறு**

149. பெண்யானைக்குரிய மரபுப்பெயர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் பெயர் எது? **பிடி**

150. ஏறு என்பது எந்த எவ்விலங்குக்குரிய ஆண்பாற் பெயர்? **பன்றி, மான், உழுவை, கவரி சுறா**

151. ஆண் ஆட்டிற்கு வழங்கப்படும் மரபுப்பெயர் ஒன்று தருக? **உதள் (கடா)**

152. ஆண் பறவையைச் "சேவல்" என்ற மரபுப்பெயர் கொண்டு அழைக்கப்படாத பறவை இனம் எது? **மயில்**

153. அளகு என்னும் பெண்பால் மரபுப்பெயர் கொண்ட பறவைகளுள் ஒன்றைத் தருக? **மயில், கோழி**

154. இந்தியாவினால் சந்திரனிற்கு ஏவப்பட்ட "சந்திராயன் 1" மற்றும் "சந்திராயன் 2" என்னும் விண்கலங்களை உருவாக்குவதில் தலைமை வகித்த தமிழ் விஞ்ஞானிகள் யாவர்? **மயில்சாமி அண்ணாத்துரை (சந்திராயன் 1, சந்திராயன் 2), கே.சிவன் (சந்திராயன் 2)**

155. உலகின் சிறந்த கணித மேதையாக போற்றப்படும் சீனிவாச இராமானுஜனரின் பிறந்த நாள் இந்தியாவில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது? **தேசிய கணிததினம்**

156. இந்தியாவில் கீழடி அகழ்வாய்வின் மூலம் கண்டிறியப்பட்டவை என்ன? **ஏறக்குறைய கி.மு. 1000 ஆண்டுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, கலாச்சாரம் சார்ந்த சான்றுகள்.**

157. பண்டைய தமிழர்களினால் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகள் எவை? **7 அளவை முறைகள்: எண்ணல், நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல்**

158. தமிழர்கள் காலத்தைக் கணிக்கப் பயன்படுத்திய அளவை முறை என்ன? **தெறித்தல்அளவைமுறை**

159. தெறித்தல் அளவை முறையில் உள்ள ஒரு நொடி என்ற கால அளவீடு எவ்வளவு காலம்? **இரண்டு கண்ணிமைப் பொழுது**

## ஈழத்து வரலாறு

160. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யார்? **இயக்கர், நாகர்**

161. "ஈழத்து உணவும் காழகத்தாக்கமும்" (காழகத்து ஆக்கமும் என்பது பர்மா நாட்டு தேக்குப் பொருட்கள்) என்பது எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது? **பட்டினப்பாலை**

162. இலங்கையில் இன்றும் குதிரைகள் அதிகளவில் காணப்படும் இடம் எது? **நெடுந்தீவு**

163. "ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை" என்னும் பாடலைப் பாடியவர் யார்? **சோமசுந்தரப் புலவர்**

164. கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் எங்கே அமைந்துள்ளது? **வந்தாறுமூலை**

165. எந்த மாகாணத்தில் வன்னி மாவட்டம் அமைந்துள்ளது? **வடமாகாணம்**

166. யாழ்பாண அரசை ஆண்ட இறுதி மன்னன் யார்? **சங்கிலி மன்னன்**

167. இலங்கையின் இறுதி மன்னன் பெயர் என்ன? **ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன்**

168. ஸ்ரீவிக்ரம இராஜசிங்கனின் இயற்பெயர் என்ன? **கண்ணுச்சாமி**

169. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆண்ட கண்டி இராச்சியம் எந்த ஆண்டு ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது? **1815 ஆம் ஆண்டு**

170. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் யாரால் காட்டிக் கொடுக்கப் பட்டான்? **எகலப்பொல என்னும் சிங்கள அதிகாரியால்**

171. ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எந்நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டான்? **தென்னிந்தியாவிலுள்ள வேலூரிற்கு**

172. இலங்கைக்கு முதன் முதலில் வந்த ஐரோப்பியர் யார்? **போத்துக்கேயர்**

173. சப்பாத்து என்று தமிழில் உபயோகிக்கப்படும் சொல் எந்த மொழியைச் சார்ந்தது? **போர்த்துக்கீச மொழி**

174. யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் யாழ்ப்பாண வைப மாலையில் கூறப்படும் காசாத்துறை (காயாத்துறைப் பட்டணம் அல்லது இறங்குதுறை) எங்கு இருந்துள்ளது? **காங்கேசன்துறை**

175. இலங்கையின் எந்தப்பகுதியில் முதலில் போர்த்துக்கேயர் வந்து இறங்கினர்? **தென்மேற்கில் உள்ள காலிப்பகுதியில்**

176. போர்த்துக்கேயர் எந்த ஆண்டில் இலங்கைக்கு வந்தனர்? **1505ஆம் ஆண்டு**

177. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் காணப்பட்ட அரசுகள் எவை?
**கண்டி, யாழ்ப்பாணம், கோட்டை, வன்னி**

178. போர்த்துக்கேயர் வந்தபோது கோட்டை இராசதானியின் அரசன் யார்? **புவனேகபாகு**

179. எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்த போது எது தலைநகரமாகக் காணப்பட்டது? **அநுரதபுரம்**

180. எல்லாளனோடு போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றியவன் யார்? **துட்டகைமுனு**

181. எல்லாளன் எந்த அரசவம்சத்தைச் சார்ந்தவன்?
**சோழ அரசவம்சம்**

182. எல்லாளன் எல்லோராலும் போற்றப்படுவது ஏன்?
**நீதியும் நேர்மையும் மிக்கவன் என்பதால்**

183. யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னன் யார்?
**சங்கிலி மன்னன்**

184. சங்கிலி மன்னனின் கொடியின் சின்னம் என்ன?
**இடபம் (எருது)**

185. யாழ்ப்பாண இராசதானியின் தலைநகர் எங்கே அமைவுற்றிருந்தது? **நல்லூர்**

186. வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் யார்?
**பண்டார வன்னியன்**

187. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டது எந்த ஆண்டு?
**1803 ஆம் ஆண்டு**

188. பண்டாரவன்னியன் இறந்தது எந்த ஆண்டு?
**1811ஆம் ஆண்டு**

189. பண்டார வன்னியன் இறந்தது வன்னியின் எந்தப்பகுதியில்?
**பனங்காமம் பகுதியில்**

190. பண்டாரவன்னியனின் காதலியின் பெயர் என்ன?
**குருவிச்சி நாச்சி**

191. பண்டாரவன்னியனின் சகோதரியின் பெயர் என்ன?
**நல்லநாச்சாள்**

192. வன்னிப் பகுதியில் உள்ள ஆறு ஒன்றிற்கு குருவிச்சி ஆறு எனப் பெயர் வரக்காரணம் என்ன? **குருவிச்சிநாச்சி தன்னுயிர் நீத்தது ஆற்றின் மணற்பரப்பிலாகும்.**

193. பண்டாரவன்னியனுக்குத் துணைபுரிந்ததற்காக ஆங்கிலேயரால் முல்லைத்தீவில் தூக்கிலிடப்பட்ட முதலியாரின் பெயர் என்ன? **குலசேகர முதலியார்**

194. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதாக எழுப்பப்பட்ட கற்சிலை எங்கே காணப்படுகின்றது? **முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கற்சிலைமடு என்னும் இடத்தில்**

195. போர்த்துக்கீசர் நெடுந்தீவில் காணப்பட்ட ஆடுகளில் இருந்து பெற்றுக்கொண்டது என்ன? **கோரோசனை (பசு முதலிய அசைபோடும் மிருகங்களின் வயிற்றில் இருந்து எடுக்கப்படும் நாட்டு வைத்தியத்தில் பயன்படும் மஞ்சள் நிறப்பொருள்)**

196. யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கீசரிடம் வீழ்ச்சி கண்டது எப்போது? **1621ம் ஆண்டு**

197. யாழ்ப்பாண அரசும் வன்னி அரசும் சிங்கள அரசுகளோடு ஒன்றாக இணைக்கப்பட்டது எப்போது? **1815 ஆம் ஆண்டு**

198. பின்வரும் பதங்களுக்கான ஆங்கிலப் பதங்களைத் தருக:

| | | | |
|---|---|---|---|
| **1.** | **கூரை** | - | **Roof** |
| **2.** | **கூறை** | - | **Wedding Sary** |
| **3.** | **கணிப்பான்** | - | **Calculator** |
| **4.** | **கணினி** | - | **Computer** |
| **5.** | **மாறிலிகள்** | - | **Constants** |
| **6.** | **உலாவி** | - | **Cursor** |
| **7.** | **செயலி** | - | **Application** |
| **8.** | **இலக்கணம்** | - | **Grammar** |
| **9.** | **கட்டுரை** | - | **Essay** |
| **10.** | **இலக்கியம்** | - | **Literature** |




தொல்காப்பிய மன்றம் - கனடா

# தமிழ்த்திறன் போட்டி
# பிரிவு 9
# 2007இல் பிறந்தோர்

Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada